4

விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registared at the G. P. O. as a Newspaper in Ceylon

மலர் 6 | காந்தி நிலையம்-உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 99) 1969 பெப்ரவரி-மார்ச் | இதழ் 5-6

**அறிவிப்பு**

காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு :

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

# ஸ்ரீ ஜயப்பிரகாஸின் பாராட்டு



அகில இலங்கை காந்தி சேவா சங்கம், சென்ற பல ஆண்டுகளாகப், பாராட்டுக் குரிய சிறந்த சமூகத் தொண்டு ஆற்றி வந்திருக்கின்றது; மகாத்மா அவர்களின் வாழ்க்கை தத்துவம், ஆகியவற்றிற்குச் சிந்தனைச் செழிப்பு மட்டுமன்றி இயன்ற அளவு செயற் செழிப்பும் ஊட்டி வந்திருக்கின்றது.

சிறந்த தலைவர்களைத் தொடர்ந்து பெற்றுக் கொண்டமையாலும் முழுநேர ஊழியராக திருவாளர் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களைப் பெற்றமையாலும், திறமை சான்றதும் ஒளிமிக்கது மாகிய தலைமையில் இச் சங்கம் இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'காந்திக்கிராமம்', கஸ்தூரிபாய் இல்லம்; ஆகிய புதிய இரு பெரிய நிறுவனங்களை உருவாக்க முற்படும் முகமாக தனது தொண்டின் எல்லையை இப்போது விரிவாக்கிக் கொண்டுள்ளது இச் சங்கம்.

இலங்கா சர்வோதய சிரமதான இயக்கத்தோடு ஒன்று சேர்ந்து வினோபா அடிகளாரின் பூதான கிராமதானதத்துவத்தைப் பரப்பும் சீரிய கைங்கரியத்தில் இச்சங்கம் ஈடுபட்டு உழைத்து வருவதும் பாராட்டுக் குரியது.

யானும் என் மனைவியும், இம் முறை இலங்கை வந்திருந்த போது இச்சங்கத்தோடு பழகி உறவு கொள்ள இரண்டு நாட்கள் வாய்க்கப் பெற்றமைக்கு மிகவும் மகிழ்கிறேன்.

எங்கள் இலங்கை விஜயத்தை இன்பகரமாக்கிய சங்க நண்பர்களுக்கு எங்கள் நன்றியும் மரியாதையும்.

ஜெயப்பிரகாஸ் நாராயன்

11.1.69.

## செய்திகள்

சர்வோதய பாத்திரங்கள் மூலம் பெப்ரவரி மாதத்தில் 109 கொத்து அரிசியும் 18 ரூபா 49 சதமும் கிடைத்தது.

அகில இலங்கைச் சாந்தி சேவா சங்கம் 'சாந்தி மார்க்கய' என்னும் சிங்களப் பத்திரிகையை வெளியிட்டுள்ளது.

சர்வோதய நிகேதனக் கட்டட இரண்டாவது சிரமதான முகாம் மே 1, 2, 3 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

## அன்பர்களுக்கு......

வணக்கம்

இரத்மலானை இந்துக் கல்லூரிச் சதுக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள சர்வோதய நிகேதனத்தில் ஏழு மாணவர் தங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கு உணவளிப்பதற்கு நூறு இல்லங்களில் சர்வோதய (பிடி அரிசி) பாத்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. சில அன்பர்கள் மாதந் தோறும் சம்பத்துத் தானம் (பணம்) உதவி வருகிறார்கள். எனினும் நிலையத்தைச் சீராக நடத்துவதற்குப் போதிய பணம் கிடைக்கவில்லை. ஒவ்வொரு அன்பர்களையும் தங்களாலியன்ற பொருளுதவி செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சம்பத்துத் தானமளிப்பவர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியாகும்.

''நாட்டில் எங்கும் அதிருப்தி தலை விரித்தாடுகிறது. சுதந்திரம் வந்துவிட்டது. ஆனால், அதனுள் புத்துயிரும் புது வலிமையையும் ஊட்ட வேண்டியது அவசியம். ஏழைகளை உயர்த்த வேண்டும். இது நம் எல்லோரதுபணி. இதற்காக ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சர்வோதய பாத்திரம் **இருக்க வேண்டியது** அவசியம்.''

— வினோபாஜீ

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
காந்தி ஆண்டு 99
1969 பெப்ரவரி மார்ச்

# பண்பாடும் சிரமதானமும்

மனிதனை இயக்கி நிற்கும் இரு முக்கிய சக்திகள் உள ஒன்று மனிதனைக் கட்டுப் பாடின்றி இன்பம் நுகர ஏவும் உந்தல். மற்றையது உண்மையுலகு முறையில் அவனின் இன்ப உந்தலை அடக்கும் சமூகத்தின் பாரம். பெரிய உளவியல் ஆசிரியரான புரொய்ட் கூறுவார் மனித வரலாறு என்பது அவன் தன்னைத்தான் அடக்கிய வரலாறு என்று இத்தகைய அடக்கு முறையே வளர்ச்சிக்கு முதற்படியாகும். இதைச் சிறிது விரிவாக ஆராய்வோம்.

மனிதனுக்கு இயல்பாகவே கட்டில்லாத வேட்கை உண்டு. எவ்வளவு தான் அனுபவித்தாலும் அவன் வேட்கை தீராது. ஐம்பொன் மிக உடையபெரும் இரசவாத வித்தைக்கு அலைந்திடுவர், காம வேட்கையிலும் மனித இயல்பு அவ்வாறே. ஆயின் இவ்வுலகின் உண்மை நிலையை நோக்கும் போது இது இயலக்கூடியதன்று. தனி ஒரு மனிதன் கட்டற்ற இன்ப நுகர்வு மற்றையவர் சுதந்தரத்தை இன்பத்தைத் தீங்கான முறையில் பாதிக்கும். எனவே இந்த உண்மை உலகு மனிதனின் கட்டற்ற இன்ப வேட்கையைத் தணித்து மறுப்பதற் காகவே உள்ளது. இந்த உண்மை உலகின் மறுப்பான தன்மையை உணர்ந்த மனிதன் தன் இன்ப வேட்கையைத் தூண்டிவிட்டு உண்மை உலகோடு முட்டி நைந்து கொள்ளக் கூடாது.

இந்த இன்ப வேட்கை மனிதன் விலங்கு உலகிலிருந்து கொண்டு வந்த பரம்பரைச் சொத்து இது அவனின் இயல்பூக்கம். நெறிப்படுத்தாத இயல்பூக்கம் மனிதனை துன்பத்துள் புகுத்திவிடும். எனவே மனிதன் முதன் முதல் என்ன செய்கின்றான்? அவன் தன் இயல்பான வேட்கையைத் தானகவே அடக்கி நெறிப் படுத்து கின்றான். இவ்வடக்கமே நாகரிகத்திகு முதற்படி. வேட்கையை அடக்குவதனால் தான் ஒவ்வொருவரும் இந்த உண்மை உலகில் மோதல் இன்றி வாழலாம் என்றால் அடக்கத்தை எவ்வாறு மனித இயல்பிற்குப் பங்கமில்லாமல் செய்யலாம் என்பது ஒரு முக்கியமான கேள்வி.

இயல்பூக்கமான முறையிலான நோக்கங்களையும் இச்சைகளையும் கைவிட்டுவிடவேண்டும் இவ்விச்சைகளின் உயர்வைப் போற்றுதலையும்விட்டு விடவேண்டும். பின்னர் சமூகத்தினை நோக்குவதாலும், சமூகத்திற்குரிய பொது இச்சைகளைத் தன் இச்சைகளாகக் கொள்வதாலுமே மனிதன் தன்னை உயர்த்திக் கொள்ளலாம். இவ்வித நோக்கு மனிதனுக்கு இலகுவில் வராது. இது அவன் தன்னைத்தான் வருத்திப் பெறவேண்டியது.

மனிதன் தனக்குத் துன்பமில்லாத நிறையின்பம் வராது என்று தெரிந்ததும் அவனுக்கு ஓர் அதிர்ச்சி உண்டாகின்றது. இதனல் இவன் தனக்கென இயல்பான ஓர் இன்பம் இல்லை என்பதை மிக வருத்தத்துடன் உணர்வான். இதனல் தனியின்பத்திலும் உயர் இன்பம் என்பதொன்றுண்டு, அது துன்பமில்லாத இன்பம் என்றுணர்கின்றான்.

இவ்வுணர்வு ஒருவனுக்கு கேட்டல் சிந்தித்தல் தெளிதலால் ஏற்படக்கூடும். ஆயின் இவ்வுணர்வு ஒருவனுக்கு ஓர் இரண்டாம் இயல்பாக மாறவேண்டுமானல் அவன் தேகத்தால் பாடுபட்டு உழைக்கவேண்டும். அவ்வுழைப்பினல் இயல்பூக்கமான இன்பவேட்கை அடங்கும்.

மனிதன் விலங்கு உலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட இயல்பினை மாற்ற வேண்டுமெனில் அவன் தேகத்தை வருத்துவதனலேயே அம்முயற்சியில் வெற்றி பெறலாம். இது அயரா உழைப்பினல் மட்டுமே ஆகும். எனவே மனிதன் உடல் வருந்த உழைப்பதன் பெருமையை நாங்கள் இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இவ்வுழைப்பு தன்னை நோக்கிச் செய்யினும் பயன் தரும்; உலகம் நோக்கிச் செய்யின் இன்னும் கூடிய பயன் தரும். இந்த அடிப்படைக் கொள்கையை வைத்து ஆயும்பொழுது சிரமதானத்தின் உயர்வை நாம் உணரலாம்.

சிரமதானம் என்ன செய்கிறது? தனி இன்பம் நாடும் மனிதனின் இன்ப வேட்கையைப் பக்குவப்படுத்தி, அவனை உலக இன்பத்திற்கு உழைக்கச் செய்கிறது. அவன் மனத்துள் எழும் விகார உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி அவனைப் பண்படையச் செய்கிறது பண்பாடு என்பது புறத்தவருக்குத் துன்பம் தராத வகையில் தன்னை ஒறுத்து நடத்தலும், இன்னும் அவர்க்கு இன்பம் தர உழைத்தலுமாம். அதற்கு வழி சிரமதானம்.

இ. இரத்தினம்.

இளைஞர்களே!

உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன்?

★ கமம்
★ நெசவு
★ தும்பு
★ அச்சு
★ தையல்
★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம் (தபால்)
அல்லது
சர்வோதய நிகேதனம்
இந்துக் கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை.

காந்தீய—சர்வோதய தத்துவங்களை அறிவதற்கு

**கிராமராஜ்யம், சர்வோதயம்**

ஆகிய பத்திரிகைகளைப் படியுங்கள்.

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

# சர்வோதயநிகேதனக் கட்டடத்தொடக்கம்

சென்ற ஆண்டு ஸ்ரீ ஜெயப்பிரகாஸ் நாராயனன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட சர்வோதய நிகேதனக்கட்டிட வேலை 31-1-69 காலை 9 மணியளவில் ஆரம்பமாயது. இந்தக் கட்டிடத்திற்கு வேண்டிய கல், மணல், சீமந்து முதலிய மூலப் பொருட்களை எங்கள் சங்கத்தின் பேராதரவாளர்களாகிய திரு. தி.இராசதுரை அவர்களும் திரு.சி.சாத்தப்பன் அவர்களும் தந்து உதவினுர்கள். நிலத்தைச் சீர்செய்தல், அத்திவாரம் வெட்டுதல், கட்டுதல் முதலிய வேலைகள் யாவும் சிரமதான அடிப்படையில் நிகழுமாறுஒழுங்குகள் செய்யப்பட்டன.

இந்தக் கட்டிடப் பணி சார்பாக 31-1-69 தொடக்கம் ஐந்து நாள் சிரமதான முகாம் ஒன்று அமைக்கபட்டது. எங்கள் சங்க உறுப்பினர்கள், அனுதாபிகள், கல்லூரி மாணவர்கள் முதலிய பல தொண்டர்கள் ஐந்து நாட்களிலும் சிரமதானத்திற் பங்குபற்றியமையால் எங்கள் கைங்காரியம் சிறப்புப் பெற்றது.

இந்த சிரமதானப் பணியைதிரு.செனேட்டர்அவர்களும் திரு .கனகசபை அவர்களும் மங்கள விளக்கேற்றி மௌனப்பிரார்த்தனையோடுதொடக்கிவைத்தார்கள். இவ்விருபெரியார் களையும் சிரமதான ஊழியர்களுக்கு எங்கள் சங்கத் தலைவர் முதலியார் செ.சின்னத்தம்பி அவர்கள் அறிமுகம் செய்து வைத்துப் பேசியதாவது.

திருவாளர் செனேட்டர் நடேசன் அவர்கள் எங்கள்சங்கத்தின் நீண்டகால நண்பன். உலக அரங்கில் அரசியல் சட்டத்துறைகளில் மிகச் சிறந்த கீர்த்தியோடு மிளிரும் இவருடைய கூர்ந்த மதியின் சிறப்பை அறிந்த அளவு இவருடைய இதயக் கனிவின் பெருக்கை உலகு அறியவில்லை; அதனை உலகு அறிய வேண்டும் என்று நினைப்பவரும் அல்லர்அவர், ஆனுல் எங்கள் சங்கம் அந்த இதயக்கனிவை நீண்டகாலமாக அறிந்தும் அநுபவித்தும் வந்திருக்கின்றது. எந்தஎந்த நேரங்களில் எங்கள் சங்கத்திற்கு உதவி வேண்டுமோ அந்த அந்த நேரங்களிலெல்லாம் எங்களுக்குக் கைகொடுத்துப் பேருதவி செய்து வந்திருக்கிறுர்கள் இரத்மலானையில் முதல் முதலாகச் சிரமதானம் செய்த போது திரு நடேசன் அவர்களே ஆரம்பித்து வைத்தார்கள். இன்றும் சர்வோதய நிகேதனக் கட்டிடம் சம்மந்தமான சிரமதானப் பணியை அவர்களே தொடக்கிவைப்பதாகிய அரிய வாய்ப்புக் கிடைத்தமை பற்றி யாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்ருேம். எங்கள் சங்கத்தின் நன்முயற்சிகள் செழிப்புடன் வளர்ச்சி பெறல் வேண்டும் என்ற பிரியத்தோடு வந்து இந்தச் சிரமதானத்திற்குத் தலைமை தாங்கிய அவருடைய பேரன்பிற்கு எங்கள் நன்றியைத் தெவித்துக் கொள்ளுகின்றேன்.''

''திருவாளர் கனகசபை அவர்கள் ஒரு பிரபல வர்த்தகர் எங்கள் சங்கத்திற்குக் கிடைத்துள்ள ஒரு புதிய நண்பர் வியாபாரத் துறையில் நேரிய வழி நின்று ஈட்டிய பொருளின் ஒரு பகுதியை எங்கள் சங்கம் போன்ற பொதுப்பணிச் சங்கங்களுக்கு உபகரித்தல் வேண்டும் என்ற சீரிய அறவுணர்ச்சி படைத்த இவர்களுடைய நட்பு எமக்குக் கிடைத்தமை பற்றி மிக்க மகிழ்ச்சி. இன்று, இச்சிரமதானத்தில் கலந்து கொள்ள வந்திருக்கும் இவருடைய பேரன்பிற்கும் எங்கள் நன்றி.''

சிரமதானப் பணியின் அருமைப் பாடு பற்றி அங்கு குழுமியிருந்த மாணவ ஊழியர்களுக்குத் திருவாளர் செனேட்டர் நடேசன் அவர்கள் அறிவு செறிந்த சில வார்த்தைகள் கூறினுர்கள்; அந்த அழகிய சில வார்த்தைகளுள்ளே ஒரு பெரிய சர்வோதயக் கருத்தை ஒளிர வைத்து இளைய உள்ளங்களில் சிந்தனைத் தெளிவும் சர்வோதயப் பணியில் ஆர்வமும் பெருகச் செய்தார்கள்.

திரு. நடேசன் அவர்கள் கூறிய வார்த்தைகளின் சாரம்;

சிரமதான ஊழியர்களே! சிரமதானத்தில் எனக்கு மிகுந்த பற்றும் ஆர்வமும் உண்டு. சீரழிந்து தடுமாறும் நமது நாட்டிற்கும்- ஏன் உலகத்திற்குமே-உய்யும் வழிகாட்டும் ஒரு சிறந்த கருத்து உங்கள் சிரமதானக் கொள்கையில் பொதிந்து கிடக்கின்றது. உடலுழைப்புச் 'செய்யாத எந்த மனிதனும் உண்பதற்கு உரிமையற்றவன் என்பது டால்ஸ்டோய் மகாத்மா காந்தி போன்ற மேதாவிகளின் சீரிய கருத்து. ஒவ்வொரு மனிதனும், எந்நிலையிலிருந்தாலும் எக் கோலம் கொண்டாலும் நாள்தோறும் குறைந்தது ஒருமணித்தியால மாகுதல் உடலுழைப்பில் ஈடுபட்டே தீரவேண்டும். அப்போது தான் உடலுழைப்பின் மகிமை காப்பாற்றப்படும்; மூளை உழைப்பே உயர்ந்தது என்று மனித உழைப்பைத் தரம்பிரிக்கும் புன்மை ஒழிந்து போக வேண்டுமானுல், யாவரும் நாள் தோறும் ஏதோ ஒரு வகையில் உடலுழைப்பில் ஈடுபடுவதை முக்கியமான- அடிப்படையான கருத்தைப் பேணிப் பரப்பும் கைங்கரியத்தில் உங்கள் சங்கம் ஈடுபட்டிருப்பதனுல் தான் உங்கள் சங்கத்தையான் நேசிக்கவும் ஆதரிக்கவும் நேர்ந்துள்ளது என்ற குறிப்பை மட்டும் சொல்லி, நீங்கள் இப்போது எடுத்துக்கொண்ட சிரமதானப்பணி சிறப்பாக நிறைவேறும் என்னும் வாழ்த்தோடு முடித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எங்கள் சங்கத்தின் சில விஷயங்களையும் சர்வோதயப் பணிகளையும் வியாபார உலகம் அறியும் வகையில் தம்மாலான பிரசாரத் தொண்டும். அதன் விளைவாகப் பொருளாதாரம் நமக்குக் கிடைக்கும் வகையில் தீவிரமாக உழைத்து உதவுவதாகத் திருவாளர் கனகசபை அவர்கள் உறுதி கூறி எம்மை மகிழ்வித்தார்கள்.

**பனைச்செல்வம்**

(திங்கள் வெளியீடு)

தனிப் பிரதி சதம் 25.

சென்னை மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம்
75, ஹாரிங்டன் தெரு
சேத்துப்பட்டு, சென்னை 31.

இலங்கையில்:
காந்தி நிலையம்
உருத்திரபுரம்

## சர்வோதயப் பாத்திரம்

நாம் உண்கிறோம். உடுத்துகிறோம். ஆனால் நமது உணவுப் பண்டங்களை சமுதாயத்திலுள்ள யாரோ ஒருவர் விளைவிக்கிறார். நாம் உடுத்தும் துணிகளை யாரோ ஒருவர் நெசவு செய்கிறார். இவ்வாறு சமுதாயத்திலுள்ள எத்தனையோ பேர்களுடைய உழைப்பினை நாம் தினந்தோறும் அனுபவிக்கிறோம். அனுபவிக்கிற நாம் ஏதேனும் ஒருவகையில் சமுதாயத்திற்கு உதவவேண்டுமல்லவா?

நம்மில் எவரும் சமுதாயத்தைப் புறக்கணித்து தனித்து வாழமுடியாது. நாம் நல்வாழ்வு வாழ சமுதாயத்திலுள்ள எல்லோரும் ஏதேனும் ஒரு வகையில் உதவி வருகிறார்கள். நாமும் சமுதாயத்திற்கு பரஸ்பரம் ஈடு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவுவதுதான் வாழ்க்கை. சர்வோதயத்தின் முதல் கொள்கை இதைத்தான் வலியுறுத்துகிறது.

பரஸ்பரம் உதவுவது என்றால் என்ன? நம்மைவிட வலியவருக்கு உதவுவதில் சிறப்பில்லை. நம்மைவிட எளியவருக்கு உதவுவதில்தான் சிறப்பு அதிகம். நம்மைவிட எளியவர் யார்? இந்த சமுதாயத்தில் உடல் உழைப்பவர்களே சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவுவதுதான் கடையனுக்கும் கடைத்தேற்றம் அளிக்கும் சர்வோதய இயக்கமாகும்.

ஆகவே சர்வோதய இயக்கத்துக்கு நம்மால் இயன்ற உதவி செய்வோம். அதை பக்தியுடன் செய்வோம். இதில் பெண்களுக்கும் பங்கு உண்டு. பெண்கள் பங்குபெற வேண்டுமென்பதற்காகவே வினோபா அடிகள் சர்வோதயப் பாத்திரத்தைக் கொடுத்திருக்கிறார். தினமும் நாம் உண்ணும் உணவில் ஒரு கை பிடி அரிசியை சர்வோதயத்திற்குக் கொடுப்போம். தினந்தோறும் ஒரு கைப்பிடி அரிசியை ஒரு பாத்திரத்தில் போட்டு வைப்போம் இதற்கு சர்வோதயப் பாத்திரம் என்று பெயர் இந்தப் பாத்திரத்தில் சேரும் அரிசியே மாதம் ஒரு முறை சேர்த்து வைத்து சர்வோதய இயக்கத்துக்குக் கொடுத்து உதவுவோம்.

சர்வோதயப் பாத்திர இயக்கம் தமிழ் நாட்டில் சென்னை, திருச்சி, கோவை, மதுரை போன்ற நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நூற்றுக் கணக்கான பெண்கள் இந்த இயக்கத்தில் முழுநேர ஊழியர்களாகப் பணிசெய்து வருகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் இதை நடத்தலாம். சிறு துளி பெருவெள்ளம்; இது போல் ஒரு கைபிடி அரிசி ஒரு பெரிய சக்தியாக மாறும். அரிசியுடன் நம் எல்லோருடைய நல்ல எண்ணமும் இதற்குக் கிடைக்கிறது. இது மிகப் பெரிய சக்தியாகும்.

சர்வோதயப் பாத்திரம் பெண்களுக்கு உரியது. ஏழை முதல் செல்வந்தர் வரை எல்லோரும் இதில் பங்கு பெறலாம். அரிசியாகத் தரமுடியாதவர்கள் ஒரு நாளைக்கு ஒரு சதவீதம் சர்வோதயப் பாத்திரத்தில் போட்டுவைத்து அதை சர்வோதய இயக்கத்திருக் கொடுத்து உதவலாம். சர்வோதயப் பாத்திரம் ஒருசாந்திப் பணி. காந்திக்கு உகந்த ஒரு அன்புப் பாத்திரத்தில் போடும் ஒவ்வொரு கைப்பிடி அரிசியும் அல்லது ஒவ்வொரு சத்தையுப் உலக சமாதானத்திற்குப் போடும் ஓட்டாகும். ஏழைகளுக்கு உதவும் இந்த இறை பணியை சர்வசமத்துவ ஒருமைப் பாட்டை வளர்க்கும் இந்த சர்வோதய பணியை வளர்ப்போம்.

வாழ்க சர்வோதயப் பாத்திரம்

—நன்றி : கிராம ராஜ்யம்

சர்வோதயபாத்திர—

## அன்பர்கள்

சர்வோதய பாத்திரத்தில் நாள் தோறும் பிடி அரிசி இட்டு இதனை மாதந்தோறும் சர்வோதய இயக்கத்திற்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைச் சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவானந்த வீதி, கொட்டாஞ்சேனை

திரு. அ. க. சுப்பிரமணியம்.
திரு. எஸ். நவரத்தினம்.
திரு. கே. சுப்பையா.
திரு. அ. வ. கணபதிப்பிள்ளை.
திருமதி க. நாகரத்தினம்.

நகரசபை வீடுகள், வெள்ளவத்தை

திரு. எஸ். வயித்திலிங்கம்.
திரு. ஏ. சோமசுந்தரம்.
திரு எஸ். பி. சோமசுந்தரம்.
திரு. வீ. நல்லசேகரம்.
திரு. நா. பொன்னுத்துரை.
திரு. சந்தானகிருஷ்ணன்.
திருமதி துரைசிங்கம்.
திருமதி கே. இரத்னசிங்கம்.
திருமதி சாமிராசா.

வெவசற் இடம், வெள்ளவத்தை.

திரு. சி. சுப்பிரமணியம்.
திரு. பீ. கணேசமூர்த்தி.
திரு. செ. இராசரத்தினம்.
திரு. கே. பேரம்பலம்.
திரு. பெரனுந்து.
திரு. ஏ. பத்மநாதன்.
திரு. எஸ். செல்வரத்தினம்.
திருமதி. ம. குணத்திலக்க.
திருமதி. லிங்கம்.
செல்வி. அ. நல்லதம்பி.

லில்லி அவென்யூ, வெள்ளவத்தை.

திரு. பொ. நல்லையா.
திரு. வ. நாச்சியப்பன்.
திரு. ரி. கேதீஸ்வரநாதன்.
திரு. சுப்பிரமணியம்.

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் சர்வோதயஅச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு மெய்கண்டான் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.